**செய்தி வெளியீடு எண்: 865** **நாள்: 06.10.2010.**

“கடந்த சில ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் மருத்துவ நலநிதித் திட்டத்திற்காக அரசு பங்குத் தொகையாக **ரூ. 1.12** கோடியும் கூடுதல் சிறப்பு மானியமாக **ரூ. 33.88** கோடியும் வழங்கியது. ஓய்வூதியர்களிடம் பிடித்தம் செய்யப்படும் மாத சந்தா மூலம் வரும் தொகையுடன் அரசு மானியத்தையும் சேர்த்து ஓய்வூதியர்களுக்கு வழங்கியதன் பயனாக ஓய்வூதியர் மருத்துவ நலநிதித் திட்டத்தின் கீழ் ஏற்பளிப்பு வழங்குவதில் இருந்த சுணக்கம் தவிர்க்கப்பட்டு, தற்போது 30.04.2010 வரை ஓய்வூதிய இயக்ககத்தில் பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்களுக்கு காசோலை வழங்கப்பட்டுவிட்டது. மற்றும் ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கும் அலுவலரிடமிருந்து 30.09.2010 வரை இவ்வியக்ககத்தில் பெறப்பட்ட ஒப்பளிப்பு கடிதங்களுக்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு ஓய்வூதியர் மருத்துவ நலநிதித் திட்டத்தின்கீழ் **30.04.2010ற்கு** முன்னரும் தமிழ்நாடு ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் **30.09.2010ற்கு** முன்னரும் ஓய்வூதிய இயக்குநர் அலுவலகத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கு காசோலை பெறாத ஓய்வூதியர்கள் அவரவர் ஓய்வூதியம் பெறும் கருவூல அலுவலரையோ அல்லது வங்கியையோ தொடர்பு கொண்டு தங்களிடம் உள்ள ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் மனுக்களை ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் பரிசீலித்து ஓய்வூதிய இயக்குநரகத்திற்கு அனுப்பிட அறிவுரை தனியே வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் மீதான நடவடிக்கை ஓய்வூதியர்களுக்கு விரைவில் தெரிவிக்கப்படும்.”

தி. கண்ணப்பன்
இயக்குநர்,
ஓய்வூதிய இயக்ககம்,
சென்னை–6.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**